සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
Sabaragamuwa Provincial Department of Education

**පළමු වාර පරීක්ෂණය 2018** — **11 ශ්‍රේණිය**
முதலாம் தவணைப் பரீட்சை **2018** — தரம்**11**
**First Term Test 2018** — **Grade 11**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය **II** — පැය දෙකයි
**தமிழ் மொழியும் இலக்கியமும் II** — **இரண்டு மணித்தியாலம்**
**Tamil Language & Literature II** — ***Two hours***

***கவனிக்க வேண்டியவை***

- ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடையைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக***
- ***இவ்வினாக்களுக்குரிய புள்ளி 80 ஆகும்***

01. சுருக்கமான விடை எழுதுக.

1. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
   ‘‘வீழுமோரிடையூற்றினுக் கஞ்சுவோர்’’
2. ‘‘கவனமாய் படித்தால் பரீட்சையில் சித்தி பெறுவாய்’’
   இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.
3. ‘‘ நாளை வருவான் ஒரு மனிதன் என்று நீலவாணன் பாடினார்’’
   இவ்வாக்கியத்தில் இடம் பெற்ற தலைமைத் தொடர், சார்புத் தொடர் என்பவற்றை குறிப்பிடுக.
4. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடு கொண்டு அமைக்குக.
   ஏன் அத்தான் கோவிக்கிறியலா கலா வீட்டு வாசலுக்கு உடனே வருகிறாள்.
5. அரவம் என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு இரு வேறு வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.
6. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.
   ‘‘அங்கதான் ஒன்ட கெட்டித்தனமிரிக்கு’’
7. சுருக்கம் எழுதுவதற்கான சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
8. இராமன் காட்டுக்குச் சென்றான்.
   இராமன் மானைப் பிடித்தான்
   மேற்படி தனி வாக்கியங்களை கூட்டு வாக்கியமாக அமைக்குக.
9. உறவு முறைக் கடிதத்தில் இல்லாத தொழில் முறைக் கடிதத்தில் காணப்படும் உறுப்புக்கள் எவை?
   முகவரி, உள்முகவரி, விளிப்பு, உடல், தலைப்பு, நன்றி
10. ‘‘கடுங்காற்றில் அகப்பட்ட மரங்கள் விழுந்தது. இவ்வாக்கியத்தில் இடம் பெறும் வழுவை இனம் கண்டு வாக்கியத்தை திருத்தி மீண்டும் எழுதுக.

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்கள் அமையுமாறு கட்டுரை எழுதுக. பொருத்தமான தலைப்பிடுக.

1) இன்றைய மாணவர்கள் பல்வேறு வழிகளில் நெறி பிறழ்கிறார்கள். இந்நிலை ஆரோக்கியமானதல்ல. சமூக அமைப்புக்கள் கண்டும் காணாமல் இருப்பது அவற்றின் பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இந்நிலையில் குடும்பம், சமூக நிறுவனங்கள், பாடசாலை என்பன எத்தகைய பங்களிப்பினை வழங்க முடியும் என்பது பற்றி விளக்கக் கட்டுரை.

2) 'காலை எழுந்தவுடன் படிப்பு மாலை முழுவதும் விளையாட்டு' என்று பாரதி கூறினான். இன்று மாணவர்களில் சிலர் முழு நேரமும் விளையாட்டில் ஈடுபட்டு தம் எதிர் காலத்தை இழக்கின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது. இந்நிலையில் நண்பர்கள் இருவர் சந்தித்து 'விளையாட்டு கல்வியைப் பாதிக்கின்றது' எனவும், இல்லை 'விளையாட்டு கல்வியைப் பாதிக்கவில்லை, நன்மையளிக்கின்றது' எனவும் உரையாடிய ஓர் உரையாடல்.

3. மனித வாழ்வு கிடைத்தற்கரியதொன்றாகும். இவ்வாழ்வை நாம் ஒவ்வொருவரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் ஒரு குறிக்கோளை வகுத்துக் கொண்டு அதனை நிறைவேற்ற எவன் அல்லும் பகலும் உழைக்கின்றானோ அவனே உண்மையில் வாழ்ந்தவன் ஆவான். இந்த வகையில் உமது வாழ்வின் எதிர்கால இலட்சியங்கள் பற்றிய உமது கருத்து வெளிப்பாடு.

4) கோமதி பல வருடங்களுக்கு முன்பே கணவனைப் பறிகொடுத்தவள். தனது பன்னிரண்டு வயது மகனுக்காகவே தான் இன்னும் உயிரோடிருப்பதாகக் கருதுபவள். மகனை பாடசாலைக்கு அனுப்புவதை நிறுத்தி தொழிலொன்றில் சேர்த்து வாழ்க்கைத் துன்பத்தைக் குறைத்துக் கொள்ளுமாறு பிறர் ஆலோசனை கூறிய போதும் அதனை ஏற்றுக் கொள்ளாது, மகனை தொடர்ந்தும் படிப்பித்து ஒரு வைத்தியராக்குவதற்கு ஆசைப்படுகிறாள். அவளது ஆசை நிறைவேறியதா? இல்லையா? இதனை வைத்துப் பின்னப்பட்ட ஒரு சிறுகதை

(25 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

கல்வி நமக்கு பல நன்மைகளைத் தருகிறது. கல்வியினால் நம் அறிவு வளர்கிறது. கல்வியால் நாம் தொழில் பெறுகிறோம். கற்றவரை உலகம் மதிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக கல்வி நமக்கு கடவுள் பற்றிய உண்மையை அறிவுறுத்தி நாம் கடவுளை அடைய துணை செய்கிறது. கடவுளை வணங்கத் துணை செய்யாத கல்வி சிறந்த கல்வியாகாது. "கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழா ஆர் எனின்" என்பார் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குண விசேடங்களையும், அவரை அன்பு செய்யும் முறைகளையும், அவரை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகிறோம். அவ்வாறு அறிவதனால் நமக்குக் கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது. அவ்வன்பு கடவுட் பணியில் நம்மை ஈடுபடுத்துகிறது. கடவுற் கொள்கை இல்லாதவர்கள் கல்வியினால் கடவுள் நம்பிக்கையைப் பெறுகின்றார்கள். கல்வியைப் போலவே கடவுட் கொள்கையைப் பெறுவதற்கும் இளமைப் பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கங்கள் எக்காலத்தும் நிலைத்து நிற்கும். தொட்டிற் பூண்ட குணம் சுடுகாடு மட்டும் ஆதலினால் நமது பழக்க வழக்கங்களைச் சிறு வயதிலேயே கற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையையும், தொண்டையும் இளமையிலேயே போதித்தல் அ்.து ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும் இளமையிற் கற்றுக் கொள்ளாது வயது வந்த பின் நற் பழக்கங்களை மேற்கொள்ளலாமெனல் பொருந்தாது.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முயற்சியால் வாழ்கின்றவனே சிறந்தவன் உழைப்பைக் கொண்டு வாழ்கின்றவனே உயர்ந்தவன். உழைத்து வாழ்கின்றவனை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது. அவன் யாருக்கும் அஞ்சி நடங்க வேண்டியதில்லை. உழைப்பே அவனுக்கு உற்ற துணை. உடல் உழைப்பும் இல்லை. உள்ளத்தில் ஓட்டமும் இல்லை. உடல் என்றும் உறக்கத்தையே விரும்புகிறது. எப்பொழுதும் உண்பதும் உறங்குவதும் தவிர வேறு வேலையில்லை. இப்படிப்பட்டவரே சோம்பர் எனப்படுவர். இவர்கள் தாம் சுத்த உதவாக்கரைப் பேர்வழிகள். தாம் உழைக்க மாட்டார். பிறர் உழைத்துச் சேர்த்து வைத்திருக்கும் செல்வத்தை எப்படியாவது கவரத்தான் கருதுவார்கள்.

1. இங்கு, ஆசிரியர் சிறந்தவன் என யாரைக் குறிப்பிடுகின்றார்?
2. சோம்பர் எனப்படுபவர் யார்?
3. எவராலும் எவற்றாலும் அழிக்க முடியாதவர்களாக இங்கு யாரைக் கருதலாம்?
4. உதவாக்கரைப் பேர்வழிகளின் செயற்பாடு என இங்கு கூறப்படுவது யாது?
5. இப்பகுதியில் இடம் பெற்றுள்ள எதிர்மறைச் சொற்கள் இரண்டு தருக. (10 புள்ளிகள்)

05. உமது பிரதேசத்தில் கழிவு நீர் செல்லும் வழிகள் சீர் செய்யப்படாமல் மிக மோசமான நிலையில் உள்ளது. இதனால் பல்வேறு சுகாதார சீர்கேடுகளை உமது பிரதேச மக்கள் எதிர் நோக்குகின்றனர். இதனை சீர்திருத்தக் கோரி சுகாதார அதிகாரிக்கு 100 சொற்களில் கடிதம்

அல்லது

சேமிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பாடசாலை மாணவர்களுக்கு ஒரு துண்டுப் பிரசுரம்

(15 புள்ளிகள்)